IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தமிழ் சினிமாவில் அனிமேஷன்

1R. Sathiamoorthy, 2B Senthi kumar

1Research Scholar, 2Assistant Professor

1Vels University,

2Vels University

**அறிமுகம்**:

ஆரம்பத்தில் கார்ட்டூன் படங்கள் அனிமேஷன் மூலம் உருவாக்கப்பட்டன. பின்னர் மெதுவாக திரைப்படங்களிலும் அனிமேஷனை உபயேகிக்க ஆரம்பித்தார்கள். வழக்கமான திரைப்படங்களை விட, அனிமேஷன் திரைப்படங்களில் கதை மிகத் தெளிவாகச் சொல்லப்படும். மிக நேர்த்தியான திரைக்கதை இருக்கும். கதாபாத்திரங்கள் மற்றும் கதைக்களம் அனைத்தும் முன்கூட்டியே முடிவு எடுக்கப்படும். பின்னணிக்குரல் தேர்வு படம் அனிமேட் செய்யத் தொடங்குமுன் ஆரம்பிக்கப்படும். பேசுபவர்களின் பேச்சு எளிய மொழியில் இருக்கும். நல்ல அனிமேஷன் திரைப்படம் எடுப்பது அசாத்திய உழைப்பு, ஒருங்கிணைப்பு, கூட்டு முயற்சி. அனிமேசன் படங்கள் அனைத்தும் ஒருமுறையாவது ரசிக்கும் வண்ணம் இருக்கும். சிறிய வயதில் நாம் கார்டூனாக, புத்தகமாக ரசித்தவற்றைத் திரைக்கதை வடிவில் பார்ப்பதென்பதே ஒரு பேரின்பம். அனிமேஷன் படங்களை மக்கள் அனைவரும் விரும்பி பார்க்கத் தொடங்கி இருக்கிறார்கள். இது ஒரு நல்ல தொடக்கம்தான்.

**தமிழ் சினிமாவில் அனிமேஷனின் ஆரம்ப காலம்:**

**அடுத்தவீட்டுப் பெண் (1960)**






முதன்முதலில் அடுத்தவீட்டுப் பெண் என்ற படத்தில்தான் அனிமேஷன் மூலம் உருவான டைட்டில் காட்சிகள் இடம்பெற்றன. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் அடுத்தடுத்த பால்கனியில் நின்று கொண்டு கழுத்தை நீட்டி பேசுவது போல அனிமேஷன் செய்யப்பட்டிருக்கும். இதற்கு Stretch and squash என்ற கொள்கையை அருமையாக உபயோகித்து எடுத்திருப்பார்கள்.

மேலும் படத்தில் இடம் பெற்ற பாத்திங்களைப் போலவே அனிமேஷன் கேரக்டர்ஸ் உருவாக்கப்பட்டு திரையில் காண்பிக்கப்பட்டன. அவை மக்கள் பத்தியில் பெரும் வரவேற்பை பெற்றன. இந்த படத்திற்கு அப்புறம் தமிழ் சினிமாவில் டைட்டில் காட்சிகளை அனிமேஷனில் எடுப்பது ஒரு வழக்கமாக ஆகியது.

**மௌனகீதங்கள் திரைப்பட அனிமேஷன் டைட்டில் காட்சிகள் (1981)**

81ம் ஆண்டு ஜனவரி குடியரசு தின வெளியீடாக, 23ம் தேதி ரிலீஸ் செய்யப்பட்டது மௌனகீதங்கள் திரைப்படம். படத்தின் டைட்டிலில் இருந்தே தொடங்கிவிடும் பாக்யராஜின் ரசனை. டைட்டில் காட்சிகள் அனைத்தும் அனிமேஷனில் ஆரம்பமாகும்.

ஒருவர் முதலில் காரில், பிறகு டாக்ஸியில், அடுத்து ஆட்டோவில், அதற்குப் பிறகு நடந்து வருவார், அவர் மேல் தயாரிப்பாளர் பெயர் போடப்படும். மூன்றாவது மாடியில் இருக்கும் பெண்ணின் கூந்தல், தரைக்கு வருவதும் அந்த கூந்தலை நடுவே இன்னொரு மாடியில் இருந்து ஒருவர்வெட்டுவதும், அப்போது எடிட்டிங் என்று டைட்டில் போடுவதும் ரசனை ப்ளஸ் ரகளை.



இசைக்கான மெட்டுகளை இளையராஜா போட்டுக்கொண்டிருப்பார். பின்னணியில் *மாமன் ஒரு நா மல்லிகைப்பூ கொடுத்தான்* என்ற டியூன். அந்த மெட்டுக்கள் கொண்ட பேப்பரில் இருந்து சிலவற்றை கங்கைஅமரன் லபக்கிவிடுவார். இசை கங்கை அமரன் என்று டைட்டில் வரும். அனைத்தும் அனிமேஷனில் அருமையாக எடுக்கப்பட்டிருக்கும். மௌனகீதங்கள் படம் பாக்கப்போறியா. டிக்கெட் கிடைக்காது சீக்கிரமே போயிரு. முக்கியமா, டைட்டிலைப் பாக்க மறந்துடாதே. செம காமெடி போ என்று சொன்னார்கள் அப்போது.

**அனிமேஷனோடு நிஜ மனிதர்களையும் ஒருங்கிணைத்து எடுக்கப்பட்ட பாடல்: 'ராஜா சின்ன ரோஜா' (1989)**



1989 ஜூலை மாதத்தில் வெளியான ஒரு தமிழ்படத்தின் ஒரு பாடலில் இடம்பெற்ற கார்டூன் கதாபாத்திரங்கள் பலரை ஆச்சரியப்படுத்தியது. அந்தப் படம், ரஜினிகாந்த், கவுதமி நடிப்பில் எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில், ஏவிஎம் தயாரித்த 'ராஜா சின்ன ரோஜா'. யானை, முயல், குரங்கு என, பல மிருகங்கள் கார்டூன் வடிவத்தில் 'ராஜா சின்ன ரோஜா' பாடலில் இடம்பிடித்தன.

மும்பையில் ராம்மோஹன் என்பவர்தான் அப்போது அனிமேஷனில் வித்தகர். மூன்று மாத காலம் அவகாசம் எடுத்துக்கொண்டு அனிமேஷன் முழுவதையும் செய்தவர். மிருகங்களை உயிரோட்டத்துடன் அற்புதமாகக் கொண்டு வந்திருந்தார். கம்ப்யூட்டர் இல்லாத அந்த நாட்களில் நிறைய வரைந்தார். நிறைய கற்பனை செய்தார்.

பாரம்பரிய (Traditional) அனிமேஷன் செய்து, எப்போதும் ரசிக்கும்படியான காட்சிகளை உருவாக்கினார். அவற்றை நேரடியாக எடுக்கப்பட்ட (Live action) விடியோவோடு கோர்த்து ஒரு பாடல் உருவாக்கப்பட்டது. இப்போதும் இப்பாடல் யூடியூபிலும் டிவியிலும் மக்களால் ரசிக்கப்படுகிறது.

**ஜீன்ஸ் (1998) படத்தில் இடம் பெற்ற மோஷன் கேப்ச்சர் பாடல்**


மோஷன் கேப்சர் என்பது பொருள்கள் அல்லது நபர்களின் இயக்கங்களைப் பதிவு செய்யும் செயல்முறையைக் குறிக்கிறது. நிபுணர்கள் ஒரு நடிகர் முழுவதும் சென்சார்களை வைக்கிறார்கள். சென்சார் அவற்றின் இயக்கங்களைக் கண்காணிக்கிறது, அவற்றை உண்மையான நேரத்தில் கணினித் திரையில் வரைபடமாக்க அனுமதிக்கிறது. அனிமேட்டர்கள் பின்னர் இயக்கம் நடப்பதற்காக ஒரு மெய்நிகர் தொகுப்பை உருவாக்குவார்கள்.

இயக்குனர் ஷங்கர் ஜீன்ஸ் படத்தில் "கண்ணோடு காண்பதெல்லாம்" பாடலுக்கு மோஷன் கேப்சர் மற்றும் 3D ஹாலோகிராம் வடிவத்தைப் பயன்படுத்தி அப்படத்தின் நாயகியின் இன்னொரு வடிவத்தை உருவாக்கி ஆடவிட்டிருப்பார். 3D ஹாலோகிராம் என்ற டெக்னிக்கை முதன் முதலாக அப்படத்தில் காட்டினார்.

**பாண்டவாஸ் அனிமேஷன் திரைப்படம் (2000)**

மகாபாரதக்கதையை அடிப்படையாகக் கொண்டு, சென்னை பெண்டாமீடியாவில் தயாரான ‘பாண்டவாஸ்’ திரைப்படம் இந்தியாவில் உருவான குறிப்பிடத்தக்க முழுநீள அனிமேஷன் திரைப்படங்களில் ஒன்று. சர்வதேச அனிமேஷன் திரைப்படங்களைப் போலவே ‘பாண்டவாஸ்’ திரைப்படத்துக்கு இளையராஜா செய்திருந்த இசையமைப்பும் மிக நேர்த்தியாகவும், பிரம்மாண்டமாகவும் இருந்தது. எழுத்தாளர் சுஜாதா திரைக்கதை அமைத்து எழுதிய அனிமேஷன் படமான ‘பாண்டவாஸ்: தி ஃபைவ் வாரியர்ஸ்’ திரைப்படம் 2000-ல் தேசிய விருது பெற்றது. இது ஒரு தமிழ் படமாக இல்லாமல், இந்தியப்படமாக ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் வெளியானது.

**ஆளவந்தானில் ஒரு அனிமேஷன் காட்சி (2001)**




ஆளவந்தான் திரைப்படத்தில் வில்லன் கமல் ஒரு பெண்ணை கொல்லும் காட்சித் தொடர் முழுவதும் 2D அனிமேஷன் பயன்படுத்தி எடுத்திருப்பார்கள். இதை லைவ் ஆக்ஷனில் எடுத்திருந்தால் அருவருப்பாக போயிருக்கும், அனிமேஷனில் இந்தக்காட்சிகள் ஒரு கவிதை போல அமைந்திருந்தது.

குவென்டின் டரான்டினோவின் கில் பில் அனிமேஷன் காட்சிகள் கமல்ஹாசனின் ஆளவந்தான் படத்தில் வந்த அனிமேஷன் காட்சிகளின் தழுவலாக இருந்தன. இதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒருமுறை மீடியாவுக்கு அவர் அளித்த பேட்டியில் கில் பில் (2003) அனிமேஷன் காட்சிகள் கமல்ஹாசனின் 2001 ஆம் ஆண்டு ஆளவந்தான் திரைப்படத்தால் உண்டான தாக்கத்தில் எடுக்கப்பட்டதுதான் என்று கூறியுள்ளார்.

**இந்தியாவின் முதல் 3D அனிமேஷன் படம் இனிமே நாங்கதான் (2007)**

வித்தியாசமான ஒரு புதிய முயற்சியில், வெங்கி பாபு இயக்கத்தில் 2007 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ் மொழி அனிமேஷன் படம் இனிமே நாங்கதான். அனிமேஷன் செய்யப்பட்ட முதல் தமிழ்ப் படம் அது. இப்படம் விச்சு, வரது, வைத்தி, கேவிந்த் என்ற நான்கு நண்பர்களின் பணக்காரர் ஆக வேண்டும் என்ற கனவு பற்றியது. நான்கு பிரதான பாத்திரங்களை வைத்து எளிமையாக கதை பின்னப்பட்டு தொழில்நுட்ப பலத்தில் படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. படத்தின் ஆரம்பத்தில் ஏதோ கார்ட்டூன் கேரக்டர்கள் போல தோன்றும் இவர்கள் மெல்ல மெல்ல உயிரோட்டமுள்ள குணச்சித்திரங்களாக மனதில் பதிந்துவிடுகிறார்கள். இந்த நான்கு பாத்திரங்களும் பேசிக் கொள்வதும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதும் முழு நீளக் காமெடியாக சிரிக்க வைக்கிறது.

படத்துக்கு மாஸ்ட்ரோ இளையராஜாவின் அருமையான பின்னணி இசையும், அசத்தலான பாடல்களும் பெரிய பலமே. 25 வரைகலைக் கலைஞர்கள் ஒரு ஆண்டு வேலை செய்து இந்தப் படத்தை நிறைவேற்றினார்கள். இதை மாய பிம்பம் ஊடக நிறுவனம் தயாரித்தது. வர்த்தக ரீதியில் சுமாரான வரவேற்பையும் பெற்றது.

**ஜெய் விக்னேஷ்வர்(2008)**

விநாயகப் பெருமானின் திருவிளையாடல்கள் பற்றி சுவாரஸ்யமான கதைகளை ஜெய் விக்னேஷ்வர் எனும் தலைப்பில் அனிமேஷன் திரைப்படமாகவே தந்துள்ளது பிரபல பொழுதுபோக்கு நிறுவனமான மாயாஜால். ஜமேஷ் கிளிஃபோர்ட் என்பவர் இயக்கிய தமிழ் அனிமேஷன் திரைப்படம். இந்தப் படத்தின் அனிமேஷன் பகுதிகளை லியோ மெனிசஸ் கையாண்டுள்ளார். வெளியான தேதி : 02 அக்டோபர் 2008. இந்தப் படம் மற்ற மொழிகளிலும் டப்பிங் செய்யப்பட்டு இந்தியா முழுவதும் திரையிடப்பட்டது.

**அய்யப்பனைப் பற்றிய அனிமேஷன் திரைப்படம் மணிகண்டன் (2009)**

40 கோடி ரூபாய் பட்ஜெட்டில் இந்தியா டேல்ஸ் மீடியாவால் தயாரிக்கப்பட்ட ஒரு முழு நீள அனிமேஷன் திரைப்படமான மணிகண்டன், இந்தி, மலையாளம், கன்னடம், தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய ஐந்து இந்திய மொழிகளில் ஒரே நேரத்தில் ஆகஸ்ட், 2009 இல் வெளியிடப்பட்டது. இதன் ஆங்கிலப் பதிப்பு டிசம்பரில் வெளியிடப்பட்டது.

2டி, 3டி அனிமேஷன், களிமண், டாய் மேஷன், ஆயில் பெயிண்டிங், கேரளா சுவரோவியங்கள் என எட்டு விதமான அனிமேஷன் உத்திகள் இந்தப் படத்தில் பயன்படுத்தப்பட்டன, இது ஹைதராபாத் மற்றும் திருவனந்தபுரத்தில் குறைந்த தயாரிப்பு. மலையாள நடிகர்களான மோகன்லால், சுகுமாரி மற்றும் ஜகதி ஸ்ரீகுமார் ஆகியோர் இப்படத்திற்கு குரல் கொடுத்துள்ளனர், ரெஜி சைன் இயக்கியுள்ளார், மேஸ்ட்ரோ இளையராஜா இசையமைத்துள்ளார்.

இந்தியா டேல்ஸ் மீடியா ஐயப்பனைப் பற்றிய அனிமேஷன் திரைப்படத்தைத் தேர்ந்தெடுத்தது, ஏனெனில் அவரது நிறுவனத்தின் நோக்கம் இந்திய பாரம்பரியத்தை உலகுக்குக் காட்டுவதாகும்.

**எந்திரன் படத்தில் அனிமேட்ரானிக்ஸ் மற்றும் அனிமேஷன் (2010)**

அனிமேட்ரானிக்ஸ் என்பது மெகாட்ரானிக் பொம்மைகளைக் குறிக்கிறது. அவை ஆட்டோமேஷனின் நவீன மாறுபாடு மற்றும் திரைப்படங்களில் மற்றும் தீம் பார்க் ஈர்ப்புகளில் கதாபாத்திரங்களை சித்தரிக்க பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

"அனிமேட்ரானிக்ஸ்" என்ற சொல் பொதுவானதாக மாறுவதற்கு முன்பு, அவை பொதுவாக "ரோபோக்கள்" என்று குறிப்பிடப்பட்டன. அப்போதிருந்து, ரோபோக்கள் மிகவும் நடைமுறை நிரல்படுத்தக்கூடிய இயந்திரங்களாக அறியப்படுகின்றன, அவை உயிரினங்களை ஒத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ரோபோக்கள் (அல்லது பிற செயற்கை உயிரினங்கள்) மனிதர்களை ஒத்திருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டவை "ஆண்ட்ராய்டுகள்" என்று அழைக்கப்படுகின்றன.

ரஜினியைப்போல ஒரு அனிமேட்ரோனிக்ஸ் ரோபோ ஒன்றை உருவாக்கி எந்திரன் படம் முழுவதும் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. 3D அனிமேஷன் உத்தியில் ரஜினி போன்ற ஒரு அவதாரை உருவாக்கி 'எந்திரன்' க்ளைமாக்ஸ் எடுக்கப்பட்டுள்ளது. அனிமேட்ரானிக்ஸ் மற்றும் க்ளைமாக்ஸில் இதுவரை முயற்சிக்காத 3D அனிமேஷன் ஆகியவை எந்திரன் படத்தில் இடம்பெற்ற உச்சங்கள். மாபெரும் வெற்றி பெற்ற இப்படம் அனிமேஷன் மற்றும் அனிமேட்ரானிக்ஸ் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு தந்தது.

**லைவ் ஆக்ஷன் காட்சிகளுடன் இணைத்து எடுக்கப்பட்ட அனிமேஷன் திரைப்படம் ஈ (2012)**

எஸ் எஸ் ராஜமௌலி இயக்கிய இப்படத்தில் ஹீரோ ஒரு ஈயாக மறுபிறவி எடுக்கிறார், அவரது மரணத்திற்கு பழிவாங்க முயற்சிக்கிறார் மற்றும் வில்லனிடமிருந்து கதாநாயகியைப் பாதுகாக்கிறார். அந்த ஈ கதாபாத்திரம் அனிமேஷனில் உருவாக்கப்பட்டு லைவ் ஆக்ஷன் காட்சிகளுடன் இணைத்து மிக அருமையாக இயக்கப்பட்டு பார்ப்பவர்களை பரவசப்படுத்தியது.

**மோஷன் கேப்ச்சர் அனிமேஷன்படம் கோச்சடையான்(2014)**

2014-ல் தயாரிக்கப்பட்ட, ரஜினி, தீபிகா படுகோன், சரத்குமார், ஆதி, ஷோபனா மற்றும் பலர் நடிக்க, மோஷன் கேப்சர் தொழில்நுட்பத்தில் தயாரான படம் 'கோச்சடையான்'. கே.எஸ்.ரவிகுமார் எழுதிய கதை, திரைக்கதையை சௌந்தர்யா ரஜினிகாந்த் இயக்கியிருந்தார்.

மோஷன் கேப்ச்சர் எனப்படும் உத்தியில் நிஜ நடிகர்களின் அசைவுகளை கம்ப்யூட்டரில் பதிவு செய்து அதை அனிமேஷனாக மாற்றும் வகைப் படம். இந்தியாவைப் பொறுத்தவரை கோச்சடையான் தான் மோஷன் கேப்சர் டெக்னிக் உபயோகப்படுத்தப்பட்ட முதல் படம்.

**மோட்டு-பட்லு - கிங் ஆப் கிங்ஸ் அனிமேஷன் திரைப்படம் (2016)**

தற்போதைய காலத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு ‘மோட்டு பட்லு’ என்னும் அனிமேஷன் தொடர் சிறந்த பொக்கிஷமாக கருதப்படுகிறது. சுட்டி டி.வி மற்றும் போகோவில் இந்தக் கேரக்டர்கள் மிகப் பிரபலம். குழந்தைகள் மட்டுமின்றி, பல தரப்பு இளைஞர்களையும் அதிகளவில் கவர்ந்த ஒரு சிறந்த அனிமேஷன் தொடர் மோட்டு பட்லு. ஃபுர்புரி நகரத்தில் வாழும் இரண்டு நண்பர்களின் வாழ்க்கையை கொண்டு உருவாக்கப்பட்ட இந்த தொடர், 2016-ல் ‘மோட்டு பட்லு – கிங் ஆப் கிங்ஸ்’ என்னும் முழு நீள 3 – டி அனிமேஷன் படமாக தயாரிக்கப்பட்டு, தமிழ் மட்டும் ஹிந்தி மொழிகளில் வெளியாகியது. இந்திய திரையுலகின் முன்னணி கலைஞர்கள் சிலர் பணியாற்றி இருக்கும் இந்த ‘மோட்டு பட்லு – கிங் ஆப் கிங்ஸ்’ படத்தில், தேசிய விருது பெற்ற விஷால் பரத்வாஜ் – குல்சார் ஆகியோரின் கூட்டணியில் உருவான பின்னணி இசை, ஒவ்வொரு காட்சிக்கும் உயிர் கொடுத்தது. அது மட்டுமின்றி, ‘மோட்டு பட்லு –

கிங் ஆப் கிங்ஸ்'படத்திற்காக தலைச்சிறந்த பாடகரான சுக்விந்தர் சிங் குரல் கொடுத்தது, மேலும் சிறப்பு.




இந்தியாவின் எழில்மிகு நகரமான ஃபுர்புரி நகரத்தில் வாழும் இரண்டு நண்பர்கள் மோட்டு மற்றும் பட்லு…. ஃபுர்புரி நகரத்தின் காட்டை எப்படியாவது அழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கும் ஒரு தீய மனிதனை பாதுகாத்து கொண்டு வருகிறது, சர்க்கஸில் இருந்து தப்பித்த ஒரு சிங்கம்… எதிர்பாராத விதமாக மோட்டுவும், பட்லுவும், அந்த சிங்கத்தின் பிடியில் மாட்டிக் கொள்கின்றனர்…. அவர்களிடம் இருந்து எப்படி இந்த நண்பர்கள் ஃபுர்புரி நகரத்தின் காட்டை பாதுகாக்கிறார்கள் என்பது தான் 'மோட்டு பட்லு – கிங் ஆப் கிங்ஸ்' திரைப்படத்தின் கதை.

**அனுமனும் மயில்ராவணனும் (2018)**

முதல்முறையாக இந்தியாவில் தயாராகியுள்ள இதிகாசக் கதையம்சம் உள்ள 3D அனிமேஷன் முழுநீளத் திரைப்படம், 'அனுமனும் மயில்ராவணனும்'ஆகும்.

இராமாயண போரின் கடைசி நாளுக்கு முந்தைய நாளில், தரையில் வீழ்ந்து கிடக்கும் ராவணனைப் பார்த்த ராமன், "நிராயுதபாணிகளைத் தாக்குவது தர்மம் ஆகாது. நீ இன்று போய் நாளை வா" என்கிறார். அன்றிரவு அவமானத்தில் பொறுமிக் கொண்டிருக்கும் ராவணனுக்கு, அவன் தலைகளில் ஒன்று, மாயாவி மயில்ராவணனைக் கொண்டு ராமனைக் கொல்வதற்கான யோசனையைச் சொல்கிறது.

அதற்கேற்ப மாயாவியான மயில்ராவணன், விபீஷ்ணனின் பலமான தற்காப்பை மீறி ராமனையும் லக்ஷ்மனனையும் கடத்தி விடுகிறான். தனியனாக அனுமன் எப்படி தன் பிரபுக்கள் இருவரையும் மீட்டார் என்பதே படத்தின் கதை.

இப்படத்தின் இயக்குநர் டாக்டர் எழில்வேந்தன் ஒரு பல் மருத்துவர், அனிமேஷன் துறையில் உள்ள ஆர்வத்தால் அதைப் பயின்று, பின் இங்கிலாந்து சென்று வார்னர் பிரதர்ஸ் உள்ளிட்ட பெரும் நிறுவனங்களில் பணியாற்றி, அந்த அனுபவங்களைக் கொண்டு இப்படத்தை உருவாக்கியுள்ளார். இப்படத்தின் அனைத்து மூல ஓவியங்களும் பெரும்பான்மையான கதைப்பலகைகளையும் எழில் வேந்தன் தன்

IPAD கொண்டு வரைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உலகெங்கிலுமிருந்து எழு அனிமேஷன் கம்பெனிகள் இப்பட உருவாக்கத்தில் பங்கு பெற்றிருந்தாலும், சென்னையில் தான் பெரும்பான்மையாக உருவானது என்பது குறிப்படத்தக்கது.



அனுமன் தான் இப்படத்தின் கதாநாயகர். பாம்பு மனிதர், ஆளை விழுங்கும் ராட்சச புழுக்கள் என விசித்திரமான எதிரிகள் பலர் அனுமனுக்கு உண்டு. அவர்களைப் பந்தாடும் காட்சிகளிலும் வீர சாகச காட்சிகளிலும் சண்டைப் பயிற்சிக்கு முக்கியதவம் உள்ளதால் ஜப்பானில் உள்ள அனிமேஷன் கலைஞர்களை வைத்து அக்காட்சிகளைப் படமாக்கியுள்ளனர். முதன்முறையாக பத்துத்தலை இராவணன் புதுமையான ஒரு வடிவத்தில் சித்தரிக்கப்படுகிறார். அவரது பத்துத் தலைகளும் தனித்தனியே செயல்படுகிறது. கலிஃபோர்னியா அனிமேஷன் பல்கலைக்கழகத்தின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் ஆசிரியர் ஒருவர் இந்தக் காட்சிகளை அனிமேட் செய்திருக்கிறார். அவர் தன் வேலையைச் சிறப்பாக முடித்த பின், “இராவணன் தான் நான் பார்த்த வில்லன் பாத்திரங்களிலேயே சிறந்த வில்லன்!” என்று கூறினார்.

அனிமேஷனிலேயே ராமன்-சீதை பிரிவுத் துயரைக் கவித்துவமாகக் காட்சிப்படுத்தியிருப்பதுதான் படத்தின் சிறப்பு. இந்தியாவிலும், சிறந்த முறையில் 3டி அனிமேஷன் படங்கள் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது அனுமனும் மயில்ராவணனும்.

**தீர (புத்தி ரித்தி சித்தி) 2020**

இயக்குனர் அருண் குமார் இயக்கத்தில் தமிழ், கன்னடம் மற்றும் ஹிந்தி மொழியில் உருவாகும் பான் இந்தியன் அனிமேஷன் திரைப்படம். இப்படத்திற்கு இசையமைப்பாளர் ஸ்ரீ முரளி இசையமைத்துள்ளார். தெனாலிராமன் கதைகளை அடிப்படையாகக் கொண்டு, ஏற்கனவே தமிழில் திரைப்படங்கள் வெளிவந்துள்ளது. இந்தநிலையில் தற்போது, 'தீர : புத்தி ரித்தி சித்தி' என்ற பெயரில், தெனாலிராமனை மையமாக வைத்து, மோஷன் கேப்ச்சர்-அனிமேஷன் படமாக உருவாகியுள்ளது. ஒரு மணி நேரம் 57 நிமிடங்கள் ஓடும் இப்படம், அமேசான் ப்ரைமில் வெளியாகியது. இத்திரைப்படத்தில், தெனாலிராமன் கதாபாத்திரத்திற்கு, நடிகர் விஜய் சேதுபதி பின்னணிக் குரல் அளித்துள்ளார்.

விவேக் ஓபராய் இந்தி டப்பிங்கிற்கும், விஜய் சேதுபதி தமிழ் பதிப்பிற்கும், பி சாய் ஸ்ரீனிவாஸ் தெலுங்கிற்கும், நடிகர் ஜீத் பெங்காலி பதிப்பிற்கும் குரல் கொடுத்துள்ளனர்.

**டெடி (2021)**

அனிமேஷன் கதாபாத்திரத்தை வடிவமைக்க இந்திய நிறுவனத்தைப் பயன்படுத்திய முதல் தமிழ்த் திரைப்படம் "டெடி". ஒரு கரடியை அனிமேஷனில் உருவாக்கி உயிரூட்டி உலவ விட்ட படம். மோஷன் கேப்சர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, லைவ் ஆக்ஷன் காட்சிகளுடன் இணைத்து எடுக்கப்பட்ட இரண்டாவது தமிழ்த் திரைப்படம். சக்தி சௌந்தரராஜன் இயக்கத்தில் ஆர்யா நடித்த படம். இது ரஜினியின் 'கோச்சடையான்' படத்தைப் போல அல்லாமல் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்திற்கு மட்டுமே தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

**இனி வரவிருக்கும் தமிழ் அனிமேஷன் படங்கள்**

**2023-ல் வெளியாகிறது எம்ஜிஆரின் பொன்னியின் செல்வன்**



வந்தியத் தேவனாகவும், அருண்மொழித் தேவனாகவும் எம்ஜிஆர் நடிக்கும் பொன்னியின் செல்வன் படத்தை அஜய் பிரதீப் இயக்குகிறார். எம்ஜிஆர் போலவே அவதாரை மென்பொருளில் உருவாக்கி அனிமேஷன் செய்து நடிக்க வைத்து இப்படத்தை உருவாக்கி வருகிறார்கள். தமிழ் உட்பட பல்வேறு மொழிகளில் இந்தப் படம் உருவாகிறது. இசைஞானி இளையராஜா இசையமைக்கிறார், சாபு சிரில், ஆண்டனி, விஸ்வநாத் சுந்தரம், ஸ்ரீநிதி அஜய் உள்ளிட்டோரும் படக்குழுவில் இடம்பெற்றிருக்கிறார்கள், படம் 2023-ல் உலகம் முழுதும் வெளியாகும்.

### தமிழ் அனிமேஷன் திரைப்படம் 'பொன்னி'

சிபி நாயகம் இயக்கிய பொன்னி என்ற தமிழ் அனிமேஷன் திரைப்படம் தற்போது வேலைகளில் உள்ளது. பொன்னி என்ற துணிச்சலான பெண்ணின் கதை இப்படத்தில் சொல்லப்பட்டுள்ளது. படத்தின் படப்பிடிப்புக்காக மோஷன் கேப்சர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளனர் தயாரிப்பாளர்கள்.

பவித்ரா லட்சுமி மற்றும் மீரா கிருஷ்ணா ஆகியோர் முறையே பொன்னி மற்றும் அவரது தாயாருக்கு குரல் கொடுத்துள்ளனர், ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார்.

### செல்லம்




கோவிந்த் நிஹலானி இயக்கத்தில், புளூ லயன் என்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரித்துள்ள, செல்லம் அனிமேஷன் திரைப்படம் விரைவில் வெளியாக உள்ளது. பிரதான பாத்திரத்தில் ஒரு ஒட்டக குட்டியையும் தோழனாக ஒரு மனித பையனையும் அனிமேஷனில் உயிரூட்டி நடிக்க வைத்திருக்கிறார்கள்.

### தமிழ் ஒலி வடிவ ஹாலிவுட் அனிமேஷன் படங்கள்

2000 கோடிகள் வரை செலவு செய்யப்பட்டு எடுக்கப்படும் ஹாலிவுட் அனிமேஷன் படங்கள் உலகம் முழுவதும் திரையிடப்படுகின்றன. தமிழில் டப்பிங் செய்யப்பட்டு தொடர்ச்சியாக வெளிவருகின்றன. அனிமேட்ரோனிக்ஸ் மற்றும் அனிமேஷன் உத்திகளை கொண்டு எடுக்கப்பட்ட ஜுராசிக் பார்க் என்ற படம்தான் இதற்கெல்லாம் அடித்தளம் இட்ட படம் என்றால் அது மிகையாகாது. 1993 -ல் வெளிவந்த அப்படம் மிகப்

பெரிய வெற்றி பெற்று இந்தியாவிலும் மற்றும் உலகம் முழுவதும் வசூலை வாரிக்குவித்த அப்படம் பான்-வேர்ல்ட்திரைப்படம் என்ற புதிய ட்ரெண்டை உருவாக்கியது. முதலில் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட முழுநீள அனிமேஷன் பான்-வேர்ல்ட்திரைப்படம் என்று டாய் ஸ்டோரி என்ற படத்தை சொல்லலாம். அன்று முதல் இன்று வரை அனைத்து ஹாலிவுட் அனிமேஷன் படங்களும் தமிழில் வெளிவரத்துவங்கிவிட்டது.

**"மெடாவெர்ஸ்" விர்ச்சுவல் மாய உலகமும் அனிமேஷன் திரைப்படங்களும்**

அறிவியல், டெக்னாலஜி வளர்ச்சி எங்கெங்கோ செல்கிறது. அதில் முக்கியமான ஒரு வளர்ச்சித்தான் மெடாவ்ர்ஸ். அந்த மாய உலகம் நாம் இணையதளத்தில் நுழைவதுபோல் இதில் விஆர்/ஏஆர் கண்ணாடிகளை பயன்படுத்தி நுழையலாம். மெடாவெர்ஸ் என்பது ஒரு ஆன்லைன் உலகம். அங்கு பயனர்களால் விளையாடவோ, வேலை பார்க்கவோ, ஒருவரோடு ஒருவர் நேரடியாக தொடர்பு கொள்ளவோ முடியும். விழாக்கள் ஏற்பாடு செய்து உலகின் எங்கோ ஒரு மூலையில் இருப்பவரையும் கலந்துக்கொள்ள செய்து அந்த உலகத்தில் ஜாலியாக உரையாடலாம். இவை அனைத்து ஒரு மெய்நிகர் சூழலில் வி.ஆர்/ஏஆர் முறையை பயன்படுத்தி செய்யலாம் என்பது தான் இதன் சிறப்பம்சம்

இதுகுறித்து விஷயங்களை திரைப்படமாக பலர் எடுத்துள்ளனர். ட்ரான் (TRON), ரெடி பிளேயர் ஒன் (Ready player one) ஆகிய படங்களை உதாரணமாக சொல்லலாம்

ஆனால் ஹாலிவுட்டில் வி.ஆர் பற்றிய மிக அற்புதமான விஷயங்கள் திரையில் இருப்பது அல்ல, தொழில் வல்லுநர்கள் அதை திரைப்பட மாயாஜாலத்தை உருவாக்க எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதுதான். மெய்நிகர் உலகில் யதார்த்தமான கேமரா இயக்கங்களை உருவாக்க மெய்நிகர் கேமராக்கள் பயன்படுத்தப்பட்டன. கேமரா மெய்நிகர் உலகின் டிஜிட்டல் மாடல்களை ‘படம்’ செய்யும், இது பார்வையாளர்களைக் காட்சிக்குக் கொண்டுவரும் மிக இயல்பான கேமரா இயக்கத்தை அனுமதிக்கிறது. இப்போது விர்ச்சுவல் ரியாலிட்டி கருவிப்பெட்டியின்(toolbox) ஒரு பகுதியாக மாறிவிட்டது, இப்போது கலைஞர் முப்பரிமாணத்தில் வரையலாம் மற்றும் வரைபடங்களில் சுற்றித் திரியலாம், இது டிஜிட்டல் கதைசொல்லலுக்கு புதிய பரிமாணத்தை சேர்த்துள்ளது. நீங்கள் VR ஹெட்செட்களை ஒத்திசைத்தால், எந்த இடத்திலும் விர்ச்சுவல் சினிமாவை உருவாக்கலாம்.

அனிமேஷன் படங்கள் தற்போது விர்ச்சுவல் ரியாலிட்டி தொழில் நுட்பம் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இனி எதிர் காலத்தில் இதன் பயன்பாடுகள் அதிகமாக இருக்கும்.

**இந்திய அனிமேஷன் சந்தை**

அனிமேஷன் துறை, வருடத்துக்குப் பல மில்லியன் சம்பாதிக்கும் வல்லமைகொண்டது. அதனாலே மற்ற முக்கியமான படங்களோடு சேர்த்து, சில அனிமேஷன் படங்களும் வெளிவரும். உழைக்கத் துணிந்த, கற்பனை வளமுள்ள இளைஞர்கள் இத்துறையில் நுழைந்தால் வெற்றிபெற வாய்ப்புள்ளது.

இந்தியாவில் இன்னும் பிக்ஸார் போன்ற அமைப்புகள் வளரவில்லை. ஆனால், சில சிறிய தொடக்கங்கள் நம்பிக்கையூட்டுகின்றன. டூன்ஸ் அனிமேஷன், க்ரெஸ்ட் கம்யூனிகேஷன், UTV டூன்ஸ், ஜீ டிவி, பெண்டா மீடியா போன்ற அமைப்புகள் வளரத் தொடங்கியுள்ளன. இவை பல விதமான அனிமேஷன் திரைப்படங்களை எடுக்க திட்டமிட்டுள்ளதாக அறிவித்திருக்கின்றன. இதில் சில விற்பனை அறிவிப்புகளாக இருந்தாலும், சில முழுப்படங்களாக மாற வாய்ப்புள்ளது. இந்திய அனிமேஷன் நிறுவனங்கள், சினிமாவைக் காட்டிலும் அதிக அளவில் வீடியோ விளையாட்டுகள் தயாரிக்கும் அமெரிக்க நிறுவனங்களுடன், மற்றும் மேல்நாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களுக்காகப் பணியாற்றி வருகின்றன. அனிமேஷ மிகவும் படைப்பாற்றல் மற்றும் கற்பனைவளம் தேவையான துறை. இதில் வர்த்தகக் குறிதான் எல்லாம். ‘Toy Story’ எவ்வளவு பிரபலமோ அவ்வளவு பிக்ஸாரும் பிரபலம். ஒரு ஏவிஎம் அல்லது ஜெமினி போல இந்திய அனிமேஷன் ஸ்டூடியோக்கள் பெயர் எடுத்தால்தான் உலகச் சந்தையில் நிலை நாட்ட முடியும்.

மும்பை, சென்னை, திருவனந்தபுரம், பெங்களூரு, ஹைத்ராபாத் போன்ற நகரங்களில் அனிமேஷன் நிறுவங்கள் வரத் தொடங்கி விட்டன. இந்நகரங்களில் உள்ள நிறுவனங்கள் வெளி நாட்டு தொலைக்காட்சிகளுக்காக அனிமேஷன் தொடர்களை தயாரிக்கின்றன.

திரைக்கல்லூரிகளில் இன்று திரைப்படம் மற்றும் அனிமேஷன் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இதற்குத் தனியாக டிப்ளமா மற்றும் தனியான விஷுவல் கம்யூனிகேஷன் டிகிரி படிப்பு எல்லாம் வந்துவிட்டது. மனித சினிமாக்கள் 100 வருடங்களுக்கு மேலாக எடுக்கப்படுகின்றன. அவை மிகவும் அழகாக பல பிரிவுகளாக சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதன் நல்ல விஷயங்கள் பலவும் அனிமேஷனுக்கும் பொருந்தும்.

அனிமேஷன் மற்றும் வீடியோ விளையாட்டு துறை நிறுவனங்கள் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றன. கடந்த 2009-ஆம் ஆண்டில், இந்திய அனிமேஷன் மற்றும் வீடியோ விளையாட்டுத் துறையின் மொத்த வருவாய் ரூ.3,430.50 கோடியாக இருந்தது. இந்திய அனிமேஷன் மற்றும் வீடியோ விளையாட்டு துறை நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அதிக அளவில் சேவை அளித்து வருகின்றன. இதனால், இத்துறை நிறுவனங்களின் வருவாய் அதிகரித்து வருகிறது. சர்வதேச அளவில், 2013-ஆம் ஆண்டில், இத்துறையின் சந்தை மதிப்பு ரூ.7.76 லட்சம் கோடியாக உயர்ந்தது. மீடியாவின் ஆதார அம்சமாக அனிமேஷன் மாறிவருகிறது. மேலும்,

இன்றைக்கு, ஒவ்வொரு விளம்பர ஏஜென்சியும், தங்களின் பார்வையாளர்களைக் கவர, அனிமேஷன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வருகின்றன.

இந்தியாவின் அனிமேஷன் மற்றும் VFX தொழில்துறையின் மதிப்பு 2020 ஆம் ஆண்டில் சுமார் 53 பில்லியன் இந்திய ரூபாயாக இருந்தது, 2024 ஆம் ஆண்டுக்குள் 130 பில்லியன் ரூபாய் வரை வளர்ச்சி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கணக்கிடப்பட்ட காலப்பகுதியில் தொழில்துறையின் கூட்டு ஆண்டு வளர்ச்சி விகிதம் 35 சதவிகிதம் ஆகும்.

**முடிவுரை**

அனிமேஷன் திரைப்படங்கள் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் தன் வசப்படுத்தி வைத்திருக்கும் ஒரு துறை. இத்துறை, வருடத்துக்குப் பல மில்லியன் சம்பாதிக்கும் வல்லமைகொண்டது. வணிக ரீதியான அனிமேஷன் மென்பொருள் உபயோகத்திறன் மிகவும் முக்கியம். அதன் பின்னால் உள்ள நுட்பத்தையும் முறையாகக் கற்க வேண்டும். அடிப்படை அறிவியல் தெரிந்த, உழைக்கத் துணிந்த, கற்பனை வளமுள்ள இளைஞர்கள் இத்துறையில் நுழைந்தால் வெற்றிபெற வாய்ப்புள்ளது.

ஹாலிவுட் அனிமேஷன் திரைப்படங்கள் அனைத்தும் தமிழில் மொழிமாற்றம் செய்யப்படுவதால் தமிழுக்கு என்று தனியாக அனிமேஷன் படங்கள் குறைந்த அளவே எடுக்கப்படுகின்றன. அவற்றின் பட்ஜெட்டும் குறைவாகவே உள்ளது, அதானால் தரமும் குறைந்து விடுகிறது. இதை நிவர்த்தி செய்ய பான் இந்தியன் படங்களாக அனிமேஷன் படங்களையும் உருவாக்கி ஸ்டார் வேல்யூ உள்ள நடிகர்களை குரல் கொடுக்க வைத்து இந்தியா முழுவதும் அதிக தியேட்டர்களில் வெளியிடவேண்டும். உலகில் உள்ள பல மொழிகளில் டப்பிங் செய்து வலைத்தளங்களில் (OTT) வெளியிடலாம். அப்படி செய்வதால் படம் வர்த்தக ரீதியில் தப்பிக்க வாய்ப்புள்ளது.